ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේෂமானது

அංක 2160/44 - 2020 ජනවාරි මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.30

*2160/44 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/78*(xv) *(அ)*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*21 ஆம் பிரிவு மற்றும் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகக் கருதப்படுகின்றதும் இலங்கை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதுமான (2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 2121/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான) 2009 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதிய 1603/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் I ஆம் நிரலில் காணப்படும் "தொழில்நுட்பவியல் பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள அட்டவணையின் II ஆம் நிரலில் காணப்படும் "3. பொறியியல் தொழில்நுட்பவியல் துறை" என்னும் பதிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பதிவுகளை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

"3. மூலப்பொருள் மற்றும் எந்திரவியல் தொழில்நுட்பவியல் துறை

4. குடிசார் மற்றும் சூழல் தொழில்நுட்பவியல் துறை

5. தொழில்நுட்பவியலுக்கான அறிவியல்துறை".

கலாநிதி பந்துல குணவர்த்தன,  
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,  
*2020, சனவரி 29.*

*02-274*

1A - PG 4860 — 518 (2020/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.